

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மைத் துறையின் சார்பாக தலா ரூ.2.30 இலட்சம் வீதம் 2 விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்துடன் கூடிய பவர் டில்லர்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் எம்.டி.லோகநாதன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர்வட்டம், மாகறல் ஊராட்சியில் நடைபெற்ற ”மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் ஒன்றிய குழுத் தலைவர் மலர்க்கொடி குமார் ஆகியோர் உள்ளனர்.

# குரோம்பேட்டை ராதா நகர் சுரங்கப்பாதை அமைக்க கூடுதல் நிலம்

## தெற்கு ரயில்வே அதிகாரியிடம் – பல்லாவரம் கருணாநிதி எம்.எல்.ஏ. நேரில் கோரிக்கை!





*பல்லாவரம் ஜன 23*

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டகுரோம் பேட்டை ஜிஎஸ்டி சாலையில் இருந்து சுமார் 5 லட்சம் மக்களுக்கு மேல் வசிக்கும் பகுதியினிலான நெமிலிச்சேரி ராயப்பேட்டை ஆகப் பகுதிகளுக்குச் செல்ல குரோம்பேட்டை ராதா நகர் வழியாக சுரங்கப்பாலம் அமைக்கும் மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் பணி நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளன தற்போது மேம்பாலத்தைச் சுற்றியோ ரயில்வே கேட்டை கடந்து தான் ஜிஎஸ்டி சாலையை அடைய வேண்டிய நிலைமை உள்ளது.

ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கும் பணி 2006 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தற்போது வரை பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதியின் பெரும் முயற்சியின் பேரிலே தற்போது பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன

ரயில்வே (LC27). கேட்டை கடக்க தண்டவாளத்துக்கு அடியில் இருபுறமும் சுடங்க பாலம் அமைக்கப்பட்டு முடியும் தருவாயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. குரோம்பேட்டை ராதா நகரிலிருந்து வரும் பொதுமக்கள் ரயில் நிலையம் செல்ல ஏதுவாக டிக்கெட் கவுண்டர்கள் சென்று டிக்கெட் எடுக்க வசதியாக. ரயில்வே பிளாட் பாரத்திற்கும் ஜிஎஸ்டி சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் நெடுஞ்சாலைத்துறை பயன்படுத்தி சுரங்கப் பாதைக்கு திரும்புவதற்கு ஏதுவாக இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டன ஜி.எஸ்.டி சாலை சந்திப்பில் நெரிசல் ஏற்படாமல் பொதுமக்கள் ஏதுவாக சுரங்கப்பாதைக்குள் செல்ல வசதியாக 3 மீட்டர் அகலம் 30 மீட்டர் நீளமுள்ள ரயில்வே நிலம் கூடுதலாக தேவைப்படுகிறது

இந்த இடத்தை தேர்வு செய்து நெடுஞ்சாலை துறைக்கு விரைவாக ஒப்படைக்கும் பட்சத்தில் உடனடியாக பணிகள் முடிந்து சுரங்கப்பாதை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மிக விரைவில் கொண்டுவர முடியும்

அதனைத் தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி ரயில்வே கோட்ட மேலாளர் அவர்களை நேரில் சந்தித்து அந்த இடத்தை ஆய்வு செய்து உடனடியாக மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார் கோரிக்கை முன்னைய பெற்ற அதிகாரி உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் உறுதி அளித்துள்ளார்

### 129வது பிறந்த நாள் - இன்று

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருவுருவச் சிலைக்கு மாலை!

## அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

*சென்னை, ஜன. 24 -*

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 129வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் இன்று (23.1.2025) காலை 9.30 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் ஒடிசா மாநிலத்தில் கட்டாக் எனுமிடத்தில் 23.1.1897 ஆம் நாள் ஜானகி நாத் போஸ்பிரபாவதி தேவி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். பள்ளி, கல்லூரிக் காலங்களில் படிப்பில் அதிக ஆர்வமாக இருந்த போதிலும், ஆன்மீகத்திலும், தேசபக்தியிலும் நாட்டம் கொண்டிருந்தார். 1915 ஆம் ஆண்டு கொல்கத்தா மாநிலக் கல்லூரியில் படிக்கின்ற நாட்களில், இந்தியாவிற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்த சி.எப். ஒட்டன் என்கிற ஆங்கிலேய ஆசிரியரை எதிர்த்து கல்லூரியிலிருந்து வெளியேறினார்.

ஆங்கிலேயருக்கு அடிபணிந்து பின்னர், தந்தையின் விருப்பத்திற்கேற்ப, 1920ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் ஐ.சி.எஸ் தேர்வில் நான்காவது மாணவராகத் தேர்ச்சி பெற்றாலும், தாய்நாட்டில் ஆங்கிலேயருக்கு அடிபணிந்து பணியாற்றிட விருப்பமில்லாமல் அப்பதவியைத் துறந்தார். நம் தாய்நாடானது விடுதலை பெற்றிட வேண்டும் என்கிற தணியாத் தாகம் கொண்டிருந்ததாலும், 1919 ஆம் ஆண்டு நடந்த ”ஜாலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவத்தை தொடர்ந்து, அகிம்சை வழி தவிர்த்து, ஆயுத வழிப்போரே இறுதித் தீர்வு என்று தீர்க்கமான முடிவு எடுத்தார்.

1921 ஆம் ஆண்டு தாய்நாடு திரும்பியவர், வங்கத்தின் ‘தேசபந்து‘ சித்தரஞ்சன் தாஸ் அவர்களைத் தனது அரசியல் குருவாக ஏற்று, அவர்காட்டிய வழியில் பயணித்து நடந்தார். அண்ணல் காந்தியடிகளுடன் இணைந்து அகிம்சை வழியில் அறப்போராட்டங்களில் ஈடுபட்டு, கொடுஞ்சிறைத் தண்டனை, கடல் கடந்த சிறைவாசம், கடுமையான நோய்களுக்கு ஆட்பட்ட நேரத்தில், அறவழிப் போரில் இனி அர்த்தமில்லை என்பதைத் தீர்க்கமாக உணர்ந்து கொண்டார்.

அண்ணல் காந்தியடிகளுக்கும், நேதாஜி அவர்களுக்கும் இடையே தொடர்ந்து ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, தனது அரசியல் ஆசான் சித்தரஞ்சன்தாஸ் அவர்களின் வழியில் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, 1939ஆம் ஆண்டு “அகில இந்திய பார்வார்டு பிளாக்” என்கிற புதிய கட்சியினைத் தொடங்கியவர், அக்கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவராக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களையும் நியமித்தார்.

**கெஞ்சி கேட்கும் பிச்சையல்ல சுதந்திரம்!**

தாய்நாட்டு மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்தார். ஆங்கிலேயர்களின் அடக்கு முறையினை, அடிமைத் தனத்தினை உலகத்திற்கு அறிய செய்து அவர்களின் ஆதரவினையும் பெற்றார். கெஞ்சியும் கேட்டும் பெறும் யாசகப் பொருளல்ல விடுதலை! ரத்தம் சிந்தி போராடிப் பெற வேண்டிய உரிமையே விடுதலை“ என போர் முழக்கமிட்டார்.

தாய்த் திருநாட்டின் விடுதலைக்காக முதன்முறையாக இந்திய தேசிய இராணுவப் படையினை உருவாக்கி, ஆங்கிலேயரை விழி பிதுங்கிட வைத்தார். பார்வைக் குறைபாடு காரணத்தால் ராணுவத்தில் இணைந்து பணியாற்றிட அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், பின்னாளில், தானே ஒரு ராணுவத்தையே தலைமையேற்று நடத்தினார்.

நேதாஜி அவர்களின் ராணுவப் படைக்கு தமிழ்ப் பெண்கள் நகைகளைத் தானமாகக் கொடுத்தனர். அந்த ராணுவத்தில் ‘ஜான்சிராணி பெண்கள் படைப்பிரிவுக்குத் தமிழகத்தைச் சேர்ந்த லட்சுமி அம்மையார் தலைமையேற்றார். அன்னார் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் நூற்றாண்டின் நினைவாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னை, மெரினா கடற்கரை காமராசர் சாலையில் அன்னாரின் திருவுருவச் சிலையினை 1997 ஆம் ஆண்டு திறந்து வைத்தார்கள்.

**ஜனவரி - 23 அரசு விழாவாக கொண்டாட்டம்!**

சுபாஷ் சந்திரபோஸ் நேதாஜி அவர்களின் பிறந்த நாளான ஜனவரி 23 ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பா ர்கள்.

### நே.சிற்றரசு - பசும்பொன் ரவிச்சந்திரன் - தயாநிதிமாறன் சிறப்புரை

# அண்ணாநகரில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

## பகுதிச் செயலாளர் நா.இராமலிங்கம் தலைமையில்

*சென்னை, ஜன. 23*

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தெற்கு பகுதி, திமுக சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம் 25-01-2025 மாலை 5 மணிக்கு அரும்பாக்கம், எம்.எம்.டி.ஏ. காலனி, தண்ணீர் டேங்க் அருகில் பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

ஏ.கே.மூர்த்தி, எஸ்.பி. குமார், ஆர்.எஸ்.கில்பர்ட், Dr.ஜீவகன் அய்யநாதன், பானுமதி, கிருஷ்ணசாமி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ந.அதியமான், இரா. ணபொன்னுரங்கம், ப.மகேஷ்ராஜா, இரா.நவீந்திரகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

வீரவணக்கம் நாள் பொதுக்கூட்டத்தில் நே.சிற்றரசு, பசும் பொன் இரவிச்சந்திரன், க,எழிலன், தயாநிதி மாறன், எம்.கே.மோகன், கார்த்திக் மோகன், வழக்கறிஞர். தமிழன் பிரசன்னா, நா.சந்திரபாபு, சி.சேரன், ஏடி,முருகன், கராத்தே ஆனந்தன், ராணி ரவிச்சந்திரன், வழக்கறிஞர் நன்மாறன், எஸ்.ராம்குமார், பி.ஆனந்த குமார், மாவட்ட நிர்வாகிகள் : து. விக்டர், ஆர்.என்.துரை, வி. எஸ். கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி மாவட்ட அமைப்பாளர்கள் : ப.பிரகாஷ், ச. அசோக்குமார், வழக்கறிஞர் தேவேந்திரன், யோகேஸ்வரி, சுந்தரேசன், குட்டி(எ) சுப்பிரமணி

மாவட்ட பிரதிநிதிகள் : ஆர்.நடராஜன், ந.அன்பு, பி.துரை, வி.தட்ணாமூர்த்தி, சி.கே.கிருஷ்ணமூர்த்தி, மா.நித்தியானந்தம், ஆர். அன்பில்பாபு, ஏ.டி.ஏ.யூதுஸ் மைதீன் மாவட்ட துணை அமைப்பாளர்கள் : அரும். கோ.முரளி, முரசொலி ஜெயகுமரன், வினோத், வி.ஜெ. கே.பரமசிவம், எம். எஸ்.கே.காசீம், எம்.எம்.டி.ஏ கார்த்திக், பி.ஜெ. ஓம்குமார், ரமே, எ.வ.பாலகிருஷ்ணன், எஸ்.எம்.செல்வம், H.சதீஷ், வி.மணிகண்டன், உ.முருகன், எஸ்.தட்சிணாமூர்த்தி, கே.குமரவேல், கே.வாசுதேவன், என்.ரமேஷ், வி.என். ஆர்.பாபு, ஜி.விஜயா கோபால், தாராவீரன், அனுராதா, அபி, சியாமளா செந்தில், உமா தர்மராஜ், இரா. கோவிந்தன், கா.சுப்பிர மணியன் பகுதி அமைப்பாளர்கள்: து.செல்வகுமார், எம்.சதீஷ்குமார், ஜி.சத்தியகுமார், ஜி.மலர்விழி, பெ.அர்ச்சுனன், மிரர் பாண்டியன், எம்.பிரபு, இரத்தினவேல், பி.வி.கோபி, பி.பல்லவி, சௌகத் அலி,

நன்றியுரை: D.கருணாநிதி, வி.எம்.சிவா, துபாய் விஜய், மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடியில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

# கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி உரையாற்றுகிறார்!

மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர திமுக சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கம் நாள் பொதுக்கூட்டம் 25.01.2025 அன்று சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் ஆவடி மாநகராட்சி கலைஞர் திடலில் நடைபெறுகிறது. இதில் மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ் தலைமை வகிக்கிறார் மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு துவக்க உரையாற்றுகிறார் பகுதிச் செயலாளர் ஜி.ராஜேந்திரன், ஆவடி மேயர் ஜி.உதயகுமார் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வி.தியாகராஜன், ஆவடி தெற்கு பகுதி நிர்வாகிகள் இரா.ருக்கு, கார்த்திகேயன், வின்செண்ட, கீதா யுவராஜ், இரா.செல்வராஜ், ஆவடி பாலா, ஹரி, எம்.குமார், ராஜேந்திரன், ஏ.கே.சகாபுதின், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். இந்த பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் ஐ.லியோனி திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்கள். இதில் மாநில ஆதிதிராவிடர் நல குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைக் கழக பேச்சாளர் வண்ணை புகாரி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், பகுதி கழக செயலாளர்கள் பேபி சேகர், ஜி. நாராயண பிரசாந்த், பொன் விஜயன், மாவட்டக் கழக நிர்வாகிகள் மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், ஒ.ஆர்.நாகூர்கனி, த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம். முத்தமிழ் செல்வன் வி. குமார் ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் என்.இ.கே.மூர்த்தி, தி.வை.ரவி, டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வே.முனுசாமி, புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆவடி மாநகர நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் கழக நிர்வாகிகள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு கிளை கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.





2026 – சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு உதகை சட்டமன்ற தொகுதி உதகை நகர பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பாக உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இதில் நகர கழகச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமை வகித்தார். உதகை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ் ஆய்வு நடத்தி பாக முகவர்களுக்கு மினிட் நோட்டு வழங்கி பாக நிலை முகவர்களை மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தி அதன் விவரங்களை தெரியபடுத்துமாறு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் இளங்கோவன், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, மாவட்ட துணை செயலாளர் அவினாஸ் கார்த்திக் மற்றும் பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2), பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### செங்குன்றம்

# சில்ட்ரன்ஸ் பேரடைஸ் பள்ளி ஆண்டு விழா!

## அரிமா டாக்டர் என்.சந்திரபாபு சிறப்புரை!

*சென்னை,ஜன.23*

செங்குன்றத்தில் உள்ள சில்ரன்ஸ் பேரடைஸ், மெட்ரிகுலேஷன் உயர் செகண்டரி பள்ளியின் 41-வது ஆண்டு விழா கரஸ்பான்டெண்ட் டாக்டர் என். ராஜன் தலைமையில் பள்ளியில் உள்ள திருமதி மீனா சபாபதி அரங்கில் நிறுவனர் மற்றும் தலைவர் அரிமா டாக்டர் என்.சந்திரபாபு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மாணவ - மாணவிகளுக்கு பரிசுகுள் வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.

பிரின்ஸ்டால் ஆர். பிலோ நன்றி கூறுகிறார்



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி வாக்குச் சாவடி பாக உறுப்பினர்கள் BLC குறித்து ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ கோவிந்தராஜன் மற்றும் கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளர் மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்கள் மாவட்ட நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு. கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பி வெங்கடாசலபதி ஏ.வி.ராமமூர்த்தி. ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், கி.வே ஆனந்தகுமார், ஆ.சத்தியவேலு, ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம், இரா.அறிவழகன். அபிராமிகுமரவேல் பங்கேற்றனர்.